முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 102, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

102—

பணிமனை

***667—திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெய்வேலி தொகுதி, நெய்வேலியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நெய்வேலியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க பரிசீலித்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று, அங்கு பணிமனை அமைப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.

திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி தொகுதி, 65,000 மக்கள் வசிக்கின்ற தொகுதி. இந்த நெய்வேலியிலே முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வாழ்கின்றனர். இந்தப் பகுதிக்குப் புதிதாகப் பணிமனை அமைத்துத் தருவதற்கு எனது கன்னிப்பேச்சின்மூலமாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

2011 செப்டம்பர் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.*

திரு. கோவி. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிடத்தின் திருவிளக்கு, தென்னகத்தின் ஒளிவிளக்கு, கழகக் காவல் தெய்வம், கழக நிரந்தரப் பொதுச் செயலாளர், ஏழைகளின் இதய தெய்வம், உலகப் பெரும் தலைவர்களின் ஒப்பற்றத் தலைவி, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனிதப் பொற்பாதம் பணிந்து பணிவோடு வணங்கி, கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசால் மக்கள் நலனுக்கெதிராகத் தற்போது செயல்பட்டு வரும் வாணியம்பாடி நகரப் பேருந்து நிலையம் மாற்றம் செய்யப்பட்டு, நகரத்தை விட்டு இரண்டு கிலோ மீட்டர் தூரம் கிராமப் பகுதியிலே அமைக்கப்பட்டு, பேருந்து நிலையக் கட்டட வேலை நடைபெற்று வருகிறது. அந்தப் பேருந்து நிலையத்தைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தலைமை நிலையச் செயலாளரும், இன்றைய வேளாண்மைத் துறை அமைச்சருமான அருமை அண்ணன் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் தலைமையிலே இரண்டு முறை அம்மா அவர்கள் உண்ணாவிரதப் போராட்டம் அறிவித்து, பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களை ஒன்றுகூட்டி மிகப் பெரிய போராட்டத்தை நடத்தியும், தற்போதும் கட்டட வேலை நடைபெற்று வருகிறது. ஆகவே, அந்தப் பேருந்து நிலையக் கட்டடத்தைப் பணிமனையாக மாற்றம் செய்து தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து நிலையம் அமைக்கின்ற பணியை உள்ளாட்சித் துறை கவனித்து வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனி வினா எழுப்பி உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் இந்தக் கேள்வியைக் கேட்டு, அதற்குண்டான தீர்வுகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர் அவர்கள்.*

திரு. ஆர். சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் போற்றும் ஒப்பற்றத் தலைவி, எந்நாளும் எங்கள் கழகப் பொதுச் செயலாளர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி எனது துணைக் கேள்வியைக் கேட்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மணப்பாறை தொகுதி, மணப்பாறை நகரம், வணிக வளம் நிறைந்த நகரம். வணிகர்கள் திருப்பூர், சென்னை சென்று வியாபாரம் செய்வதற்கேதுவாக மணப்பாறையிலிருந்து சென்னைக்கு ஒரு பேருந்தும், மணப்பாறையிலிருந்து திருப்பூருக்கு ஒரு பேருந்தும் இயக்க அரசு ஆவன செய்யுமா எனப் பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மணப்பாறையிலிருந்து சென்னைக்கும், மணப்பாறையிலிருந்து தொழிலாளர்கள் திருப்பூருக்கும் வேலைக்குச் செல்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று பேருந்து இயக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வைகைச்செல்வன் அவர்கள்.*

டாக்டர் வைகைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை பேருந்து நிலையத்திற்கு தொலைதூர, நீண்டதூரப் பேருந்துகள் அதாவது திருச்செந்தூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய ஊர்களுக்குச் செல்கிற பேருந்துகள் எல்லாம் அருப்புக்கோட்டை பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லாமல் நேரடியாகப் புறவழிச் சாலையின்வழியாக சென்று விடுகின்றன. இதனால் பயணிகள் மிகுந்த துயரமும், துன்பமும் அடைகிறார்கள். ஆகவே, பயணிகளுடைய வாட்டத்தையும், ஏக்கத்தையும் போக்குவதற்கு, போக்குவரத்துத் துறை அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

2011 செப்டம்பர் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், பயணிகளின் வசதிகளுக்காக பேருந்துகள் எங்கெல்லாம் தேவையோ, பேருந்துகள் எங்கெல்லாம் நின்று செல்ல வேண்டுமோ அங்கெல்லாம் நடவடிக்கை எடுத்து, உரிய வகையில் இயக்க வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையின்படி, அருப்புக்கோட்டைக்குப் புறவழிச் சாலையில் செல்கின்ற பேருந்துகள் அருப்புக்கோட்டைக்கு உள்ளே சென்று வர உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பின் அகரமாக, அறிவின் சிகரமாக, ஆற்றலின் இருப்பிடமாக, அஞ்சாமையின் உறைவிடமாக விளங்குகின்ற நான் வணங்கும் தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, காட்டுமன்னார்கோவில் பகுதிவாழ் மக்களினுடைய கனவாக இருக்கின்ற போக்குவரத்துப் பணிமனை, வக்ஃபு வாரியம் நிலம் ஒப்படைப்பு செய்தவுடன் பணிமனைத் துவங்கும்; பணி தொடங்கப்படும் என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். வக்ஃபு வாரியத்திடமிருந்து நிலம் ஒப்படைப்பு செய்யப்பட்டு விட்டதா? போக்குவரத்துப் பணிமனை துவங்கும் பணி எப்பொழுது தொடங்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடம் சில தனி நபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிறது. அதுகுறித்து, வக்ஃபு*

வாரியத்திற்கு, துறையின்மூலம் கோப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தக் கோப்புக்கு விரைவில் நல்ல தீர்வு கிடைக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைக்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

103—

தொழிலாளர் நலன்

***171—திரு. எம். ஆறுமுகம்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பஞ்சாலைத் தொழிலாளர்களையும் E.S.I., P.F., திட்டத்தின்கீழ் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

10 அல்லது அதற்கும் மேற்பட்ட தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி, மின்சாரத்தை உபயோகிக்கும் பஞ்சாலைகளில் அல்லது மின்சாரத்தை உபயோகிக்காத 20 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள பஞ்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் அரசு ஈட்டுறுதித் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

அதுபோல 20 அல்லது 20–க்கு மேற்பட்ட தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்தியுள்ள பஞ்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டத்தின்கீழ், பட்டியல் I–இன்கீழ், வருங்கால வைப்பு நிதி வசதி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் E.S.I., P.F., ஆகிய சட்டங்கள் மத்திய அரசால் அமல்படுத்தப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இம்மன்றத்தின் பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.